**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.16/2025

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | மாரியப்பன் |
| Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.03.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 8 ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் படித்து காண்பித்து நான் உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. இறந்துபோன கிருஷ்ணனின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வாதிகளின் சகோதரர் மாடசாமியின் இறப்புசான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் பிரதிவாதியின் மேலெழுத்து இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 2ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 3ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 4ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 8ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்ட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**நீதிமன்ற கேள்வி :–**

1. எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் ஆவுடைத்தங்கம். எனது தந்தைக்கும், அவரது முதல் மனைவி ஆவுடைத்தங்கத்திற்கும் ஒரேவாரிசு தான், அவர் தான் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி. எனது தந்தையின் முதல்மனைவி தற்போது உயிருடன் இல்லை, அவர் இறந்தபின்புதான் எனது தந்தை 1ம் வாதியை திருமணம் செய்தார், அவர் தான் எனது தாயார்.

2. எனது தந்தையின் முதல் மனைவி இறந்து சுமார் 55 ஆண்டுகள் இருக்கும். 2ம் வாதி எனது தந்தைக்கும், 1ம் வாதிக்கும் பிறந்த மகனாவார். 3 மற்றும் 4 வாதிகள் எனது தந்தைக்கும், 1ம் வாதிக்கும் பிறந்த மகள்களாவார்கள்.

3. எனது தந்தைக்கும், 1ம் வாதிக்கும் மாடசாமி என்ற மகன் இருந்தார், அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் இறப்பை நிரூபணம் செய்யதான் நான் வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அவரது வாரிசுகள்தான் இந்த வழக்கின் 5 முதல் 7 வாதிகளாவார்.

4. நான், வாரிசுசான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனுவானது 1ம் பிரதிவாதியால் எனது தந்தைக்கு 2 மனைவிகள் உள்ள காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே இந்த வழக்கை வாரிசுசான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

5. 3ம் பிரதிவாதி எனதுதந்தையின் வாரிசு என்றால் சரிதான்.

<u>குறுக்குவிசாரணை (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

1. எனது தந்தையின் முதல் மனைவி பெயர் ஆவுடைத்தங்கம் என்றால் சரிதான். அவரின் இறப்பு மற்றும் வாரிசுசான்றிதழை இந்நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கும், 1ம் வாதிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு சரியாக தெரியாது, ஆனால் ஆவுடைத்தங்கம் இறந்தபின்புதான் நடந்தது. அவர்களது திருமணத்தை தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான், ஆனால் வா.சா.ஆ.4 ஆவணத்தில் கோமதியம்மாளின் கணவர் பெயர் கிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. எனது தந்தையின் முதல்திருமணத்தின் பலனாக பிறந்தவர் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான்,அவரும் என் தந்தைக்கு ஒரு வாரிசு என்றால் சரிதான்.

3. எனது தாத்தா கருப்பன், பாட்டி கருப்பாயிம் எனது தந்தையின் வாரிசுகள் என்றால் சரிதான், அவர்கள் தற்போது உயிருடன் இல்லை.

எனது தந்தைக்கும், 1ம் வாதிக்கும் 2வதுதிருமணம் மூலம் 3 முதல் 4 வாதிகள், 8 வாதியாகிய நான் தான் வாரிசு என்றால் சரிதான். எங்களது மனுவானது எனதுதந்தைக்கு 2 மனைவிகள் உள்ளதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai